திராவிடன்

தமிழ் வாரவெளியீடு : ஆசிரியர் என். வி. நடராசன்

ரிஜிஸ்டர் நெ. M. 4870	
12 பக்கங்கள்	0—1—6
வெளிநாடு	0—2—0
ஆண்டு சந்தா	
உள்நாடு	5—0—0
வெளிநாடு	6—8—0

மாலை 1 — சென்னை 4—4—1948 ஞாயிறு — மலர் 33

DELIVER 5 APR 9 30 A.M. COIMBATORE

மார்ச்சு. 26.

பேசுகிறது.

மார்ச்சு-26 நம் மாகாண அரசியல் சரித்திரத்தில் குறிப்பிடத் தக்க நாள். திராவிடத் தந்தை பெரியார் அவர்கள் 1922-ல் எதற்காக காங்கிரசை விட்டு வெளியேறினாரோ அவ்வாரிய ஆணவத்தை, சூழ்ச்சியை, நயவஞ் சகத்தைப் பற்றி பேசாத காங்கிரஸ் திராவிடர் இடையாது அன்று.

மாலை 3—மணியிலிருந்தே மவுண்ட் ரோடிலுள்ள சர்க்கார் மாளிகையில் மக்கள் ஆயிரக்கணக்கில் கூடியவண்ணமிருந்தனர். கூடினர் என்றால் ஒன்றாய் அல்ல. (எல்லா) ஆரியத் தோழர்களும் ஒரு பிரிவாகவும், காங்கிரஸ் திராவிடத் தோழர்கள் மற்றொரு பிரிவாகவும், பொதுமக்கள் வேறொரு பிரிவாகவும், ஆக சர்க்கார் மாளிகை மண்டப மைதானமே இடங் கொள்ளாத அளவில் பெருங் கூட்டம்.

இம்மூன்று பிரிவினரும் தங்கள் தங்களின் உள்ளக்கிடக்கையை எடுத்துக் கூறிக்கொண்டனர்

காங்கிரஸ் திராவிடர்கள்:

ஈ. வே. ரா. தமிழ் நாட்டு காங்கிரஸ் தலைவராகயிருந்த காலத்திலிருந்து இன்றுவரை பார்க்கிறோம்; நம் நாட்டு அரசியலில் ஒரு தமிழன் தலைவராகவோ அன்றி முக்கியஸ்தராகவோ முதலிடம் பெற்றால அதை எவ்வகையிலாவது ஒழித்துக்கட்டுவதே பார்ப்பனர்களின் பரம்பரை வழக்கமாக, அரசியல் பிழைப்பாக யிருந்து வருகிறது. இவ்வித நிலையை அடியோடு ஒழிக்காதவரை இந்நாட்டு அரசியலும் மற்றும் மக்களின் நலனும் சீர்படுவதென்பது இயலாத காரியமாகும்.

தென்னாட்டுப் பார்ப்பனரின் வகுப்புவாத புத்தியைப் பார்க்கும்போது இன்னும் 12 ஈ. வே. ரா. க்கள் தோன்ற வேண்டியிருக்குதப்பா! இது ஒரு பிரபல காங்கிரஸ் எம். எல். ஏ., மனமார தன்மான உணர்ச்சியுடன் கூறியது.

நாம் சு. ம., கருப்புச்சட்டைக்காரர் என்றெல்லாம் நையாண்டி செய்கிறோமே, அவர்கள் கூறுவதற்கும் இந்த பார்ப்பனர்கள் நடப்பதற்கும் என்னய்யா வித்தியாசமிருக்கிறது! பாருங்களேன் பரம சாது நமது ராமசாமி ரெட்டியார்; அவரைக்கூட அரை விநாடி நிம்மதியாய்பதவியில் விட்டார்களில்லையே இந்த வைத்தியநாதன்களும் வாதாச்சாரிகளும், சர்மாக்களும், அய்யங்கார்களும்.

போது மக்கள்:

காங்கிரசிலே திராவிடர் கழகம் நிலைத்துவிட்டது போன்றிருக்குதே; இன்றைய காங்கிரஸ் திராவிடரின் உணர்ச்சியைப் பார்த்தால், ஒருக்கால் மண்டபத்திற்குள்ளே நடைபெறும் தலைவர் தேர்தல் கூட்டத்தில் ஈ வே. ரா. பெரியார் வந்துவிட்டாரோ?

காங்கிரஸ் பாாப்பனர்:

அந்த இழவெடுத் தநாயக்கன் வெளியே யிருந்துக்கொண்டு நம் உயிரை வாங்கினால் இந்த பாழாய்ப்போன, ராமசாமி ரெட்டி நம் மூடனிருந்தே உயிரை வாங்கி வருகிறானே! என்ன அக்கிரமண்டா இது! நம்ம படேல் சொன்னாலும் இப்போது பலிக்க மாட்டேன்னுதே! இந்த சுப்பராயன்தான் என்ன மகாயோக்கியம்! கடைசியாக அவரது அரைகுறை பாலிஸியைத்தானே காண்பித்து விட்டார்.

இருக்கட்டுண்டா பார்க்கலாம் ஒருகை! நம்ம ராஜன் எப்படியோ

(3-ம் பக்கம் பார்க்க)

திராவிட மாணவர்களே :: :: திரண்டுவாருங்கள்

மாணவன், சிவசிதம்பரம், (சிக்கல்.)

திரண்டு வாரீர், என்று ஈண்டு கண்டவுடனே திருப்பதி, பழனிக்கு என்று தோன்றும் சிலருக்கு. திருமுலைப்பால் உற்சவத்துக்கும். காசி, ராமேசுவரத்துக்கும் காணிக்கை செலுத்த என்று தோன்றும் சிலருக்கு. மாசி மகத்துக்கும், மகாமக உற்சவத்தக்கும் என்று தோன்றும் பலருக்கு நாம் குறிப்பிடுவது இஃதன்று. வீழ்ச்சியுறு தமிழகத்தில் (திராவிடத்தில்) எழுச்சியை உண்டாக்க, விசை ஒடிந்த தேகத்தில் வண்மை உண்டாக்க, வர்ணாஸ்மரக்கோட்டையை தகர்க்க, ஜாதி மத, மூடபழக்கவழக்கங்களை ஒழிக்க, தொழிலாளியின் துயரை நீக்க, இழிவை ஒழிக்க எதிர்கால ஆக்கவேலையில் ஈடுபட வேண்டிய திட்டங்களைப் பெற, திரண்டுவாரீர் "ஈரோட்டுப் பாசறைக்கு" பயிற்சி பெற என அழைக்கின்றேன். பண்பையும், திறமையும், தன்மானத் தந்தை, நம் லெனின் பெரியாரிடமிருந்தும் திட்டத்தை பெற!

வெளி நாடு சென்று படித்தால் ஜாதி கெட்டு விடும். என்ற எண்ணத்தை மாற்றி, மேல்படிப்பு படிக்க, நூற்றுக்கணக்கான வருடங்களாக இருந்தவரும் மூட நம்பிக்கைகளை சிதற அடிக்க, தீண்டாமையை துறத்த, பல நூற்றாண்டுகளாக வளர்க்கப்பட்டு வந்த சமூகக் கொடுமையால் மனித இனம் அப்பாற்பட்டதாக, சென்று விட்டதை மாற்றி, அமைக்க, முன்னேற்றத்தை தடை செய்யும் புராண. இதிகாச படிப்பை விட்டு வெளியே வந்து, நெடுந்தொலைவு சுற்றி, பிறநாடுகள் எவ்வாறு முன்னேறுகின்றன என்பதை எடுத்துக் காட்ட, இவற்றை எல்லாம் அறிய எழுந்துவாரீர் நம் 'பாசறைக்கே!'

எளியவர் மேல் இரக்கம் கொள்ள, அவர்களது பசித்த வயிறுக்கு உணவு கொடுக்க, உடுக்க உடையும், இருக்க இடமும் கொடுக்க, அறியாமை இருளில் ஆழ்ந்துள்ள மக்களுக்கு அறிவை ஊட்ட, நம் முன்னோரால் விலங்கும் நிலைக்கு கொணரப்பட்டுத் தாழ் நிலையில் உள்ள ஏழைமக்களை மனிதராகச் செய்யும் முயற்சி பெற, இவற்றை அறிந்து, நாட்டு மக்களிடையே நவில, திரண்டு வாரீர்! திராவிட பாசறைக்கே! ஒருவன் பாகமாகச் செய்த பண்டமுண்பவும், நல்ல பக்குவமான பழங்களுண்ணவும், தாகமானால் பல பானகமும், உண்டு மகிழவும், ஒருவன் நல்ல பண்டங்களைக் கண்டறியாது, ஒரு நாள் கூடவயிறார உண்ணாது, அல்லும் பகலும் அலைந்திடவும், பசி ஆற வழி இன்றி வாடிடுவதை மாற்றியமைக்கவும், காலத்துக் கேற்ற உடையும், வாசமுள்ள சந்தனமும் பூசி ஒருவன் சுகித்திருக்க, மற்றொருவன் பட்டினியாக இறந்து படவும், அன்னப்பால் காணாமல் அழவுமான, இருக்கும் நிலையை நம் நாளிலேயே மாற்றியமைத்து, மக்கள் ஆட்சி மலர, எத்தனிக்க வேண்டிய முயற்சியை பெறுவோம் வாரீர் இளஞ் சிங்கங்காள்! நம் பாசறைக்கே!

நம் நாட்டிலே உள்ள குறைகளை களைய, (தமிழ்ப் பெரியார். திரு. வி. க. அவர்கள் முன்பு இலங்கையில் சொற்பொழிவாற்றியது போல) பெண்களுக்கு விடுதலையை அளிக்க, மக்களுள் உள்ள உயர்வு தாழ்வை ஒழிக்க, பிறப்பில் தீண்டாமை விரட்ட, கருத்து வேற்றுமைக்கு மதிப்புக் கொடுக்க, பொறாமையை ஒழிக்க, இதற்கான திட்டங்களைப் பெறலாம், வாரீர்! நம் பயிற்சி கூடத்துக்கு! மதம், சாஸ்திரம், சம்பிரதாயம், கடவுள் மோட்சம், நரகம், பாவம், புண்ணியம் என்று ஊரைஏய்த்து உல்லாச வாழ்வு வாழும் எத்தர்களின் ஆபாசமான புராணங்களை எரிக்க, பொதுவுடமை பூக்க, சமதர்மம் தழைக்க, இதற்கான முயற்சியில் ஈடுபட எண்ணும் நண்பர்காள்! புறப்படுங்கள் பயற்சி முகா முக்கே!

வாழ்நாள் முழுவதும் பயனற்றவை பேசும் வீனர்களாகாதீர்கள். பிற நாடுகள் முன்னேறுவதை நோக்குங்கள். உங்களைப் போல உள்ள மனிதர்களை நேசிக்கின்றீர்களா? நாட்டை நேசிக்கிறீர்களா? நேசிப்பதாயின் வாருங்கள். நாம் அனைவரும் உழைப்போம். பின்னால் திரும்பி பார்க்க வேண்டாம். முன்நோக்கமே தேவை! இவை தாம் இன்று தேவை! இவற்றை செய்ய சுயநலமற்ற, அறிவு பெற்ற இளைஞர்களையும் மாணவர்களையும் எத்தனை பேரை நம் நாடு (திராவிட நாடு) அடையக் கூடும்? தன்னலம் கருதாத தந்தை, பொறுமையின் சிகரம் பெரியார் அவர்கள் கூறும் வார்த்தை கேட்டு உணர்ச்சிபெறுங்கள்! எழுங்கள்! உழையுங்கள்! வெற்றி நமதே! அமைதி, ஆரவாரம் இன்மை, நிதானமான தொண்டு, இவையே வேண்டற் பாலன! வெல்க முயற்சி! எழுந்து வாருங்கள், நம் பாசறைக்கே! என, பணிவுடன் அழைக்கின்றேன்; நாம் அனைவரும் ஒன்று படுவோம்!

சர். சி. வி. ராமன் ஈ. வே. ரா. ஆகிறார்!

கோவையில் சென்ற வாரம் தோழர். ஜி. டி. நாயுடு அவர்கள் அளித்த வரவேற்பின்போது தென்னாட்டு விஞ்ஞான அறிஞர்களில் ஒருவராகிய சர். சி. வி. ராமன் அவர்கள் மனம் விட்டுப் பேசுகையில் குறிப்பிட்டதாவது:-

“தென்னிந்தியா (சென்னை மாகாணம்) மத்திய அரசாங்கத்தின் கண்களிலிருந்து மறைந்துள்ளது. வேண்டுமென்றே இந்திய சர்க்கார் தென்னிந்தியாவைப் புறக்கணிக்கிறார்களா என்று கூட சந்தேகிக்க வேண்டியிருக்கிறது. தென்னிந்தியாவில் ஒரு சில தொழிற்சாலைகளாவது ஏற்படுத்த வேண்டுமென மத்திய சர்க்கார் தொழில் மந்திரிக்கு ஆலோசனைக் கூறிய பின்னர், தோல் உற்பத்தி சாலை ஒன்று ஏற்படுத்த எண்ணியுள்ளார் களாம்.”

மாகாண உணர்ச்சி கூடாதென்ற மட்டரகப் பேச்சை “கிராம போன் பிளேட்” போன்று கூறிவரும் மதியிழந்த மாந்தர்கள் (பிராமண அறிஞரான) சர். சி. வி. ராமன்கூட தனிநாடு தென்னாடு என்று பேச முற்பட்டு விட்டாரே, ஒருக்கால் சர். சி. வி. ராமன் அவர்களும், ஈ. வே. ராமசாமியாகி விட்டாரோ” என்று முணுமுணுக்கின்றனராம். என மயிலைக் குருவி ஒன்று கூறுகிறது.

விகடன்
பரிமள பாக்குத் தூள்

50 காலணா பொட்டலம் கொண்ட பாக்கெட் அணா 9, 1 குரோஸ் 9 அணா பாக்கெட் ரூ. 72 மாதச் சம்பளம் ரூ. 60 முதல் ரூ. 100 வரையில் விற்பனையாளர்கள் தேவை, விவரங்களுக்கு எழுதவும்.

மாணிக்க விலாஸ், 11பீட். மதராஸ்

கல்லக்குறிச்சி பகுத்தறிவு கோட்டையாகிறது

திராவிட நாடு பகுத்தறிவாளர். மாநாடு தென் ஆர்க்காடு கல்லக்குறிச்சியில் 28—3—48-ல் சிறப்புற நடந்தேறியது. எல்லா கட்சித் தோழர்களும் தாய்மார்களும் ஏராளமாக வந்திருந்தனர், காலை 9-மணிக்கு மாநாட்டுத் தலைவர் பெரியார் அவர்களையும் மற்றபிரமுகர்களையும் ஊர்வலமாக அழைத்துச் சென்றனர்.

தோழர் அமாவாச்சனார் மாநாட்டின் நோக்கங்களை எடுத்துக் கூறினார். “டார்பிடோ” ஆசிரியர் தோழர். என். ஜிவரத்தினம் கொடியேற்றுவித்துப் பேசினார் ‘விடுதலை’ ஆசிரியர் தோழர். எஸ் குருசாமி, பி. ஏ., மாநாட்டைத் திறந்து வைத்தார். வரவேற்புத் தலைவர் தோழர்-வாசுதேவன் யாவரையும் வரவேற்றுப் பேசினார் தலைவர் பெரியார் அவர்கள் மாநாட்டுக்குத் தலைமை வகித்து அரியதோர் ஆராய்ச்சியுரை யாற்றினார்: பின்னர் மாநாடு, உணவுக்காக ஒத்திவைக்கப்பட்டது.

மீண்டும் மாலை 4—மணிக்கு மாநாடு பெரியார் தலைமையில் கூடிற்று. மறைந்த மாவீரர்கள். வ. வு. சிதம்பரனார் சிந்தனைச் சிற்பி சிங்காரவேலர் படங்களைத் தோழர். என். வி. நடராசன் திறந்து வைத்தார். பகுத்தறிவியக்கத் தந்தை பெரியார் படத்தையும், திராவிட நாடு படத்தையும் ‘தோழன்’’ ஆசிரியர் எ. பி. ஜனார்த்தனம் திறந்து வைத்தார் தோழியர். குஞ்சிம் குருசாமி, பி. ஏ., எல் டி. “பகுத்தறிவு” என்னும் பொருள்பற்றிப் பேசிய பின் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டு தலைவர் முடிவுரையும், நன்றியுங் கூற மாநாடு இனிது முடிவுற்றது.

திருத்தம்—முதல் பக்கம் முதல் காலத்தில் 4- வரியில் 1922 என்பதை 1924 என்று வாசிக்கவும்.

முதல் பக்கத் தொடர்ச்சி

ஓட்டிக் கொண்டிருக்கிறார் சும்மா வாயிருப்பார்!

மார்ச்சு 26-ந் தேதி மவுண்ட் ரோட் மகாவிஷ்ணு மண்டபத்திற்கு எதிராயுள்ள அரசியலார் மாளிகையில் நடைபெற்ற காங்கிரஸ் கட்சித் தலைவர் தேர்தலின்போது உரையாடப் பட்டதென்று தேசியக் குருவி கூறிக் கொண்டே சென்றதாம்.

வைத்ய அரசர்,
வைதியபதி, ராஜயோகி
டாக்டர் வெற்றியின்

வெற்றி சிறந்தரத்தவிருத்திக்கு
VETRI Best Nervine Tonic

இன்றே சாப்பிட்டு குணம்காணுங்கள் ரூ. 500 மதிப்புள்ள மருந்து ரூ. 5 தான் ரூ. 5½ M. O. அனுப்புக ரிஜிஸ்டரில் அனுப்புகிறோம். மாதம் ரூ. 50 சம்பளத்தில் ஏஜென்ட்கள் தேவை. விபரம் நிபந்தனைக்கு, ஒரு பாட்டல் மருந்துடன் ரூ 5.

ஐயப்பன் பார்மஸி
தபால் பெட்டி 3, திருநெல்வேலி

யானைக்கால் நிகரற்ற மருந்து
எலப்டோ பில்ஸ

ஆரம்ப அல்லது கடுமையான யானைக்காலு பலிலேரியா வியாதிகளுக்கு பல நாள் அனுபத்தின் பயனாக தயாரிக்கப்பட்டது, உத்திரவாதமுள்ளது. விலை. ரூ. 9-8-0. த. சி. தனி, காலை 10 மணி வரையில் நேரில் பார்க்கலாம்.

சீனு அண்டு கம்பேனி,
9, (S) திருவொற்றியூர் ஹைரோடு,
தாங்கள், மதராஸ-19.

மாதவிடாய் நிகரற்ற மருந்து
(தேவி பில்ஸ்)

எக்காரணத்திலும் எத்தனை மாதமானும் நின்றுவிட்ட மாதவிடாய் உடனே வெளியாகும், எல்லோரும் திருப்தி யடைந்திருக்கின்றனர். போலி மருந்தை வாங்கி ஏமாறுதீர்கள், விலை ரூ. 7. (ஸ்பெஷல்) ரூ.9. (த. சி: தனி)

கர்ப்பத்தடை ஸ்பெக் பில்ஸ்

ஆறு நாள் சாப்பிட்டால் 12 வருஷத்திற்கு கருத்தடையை உண்டாக்குவது. மாதவிடாய் தவறுது உத்திரவாதமுள்ளது. போலிகளை வாங்கி ஏமாறுதீர்கள் (ஸ்பெக் ஜெல்லி) டெம்பாவரிபாக கருத்தடையை உண்டாக்கும். விலை பில்ஸ ரூ. 10. ஜெல்லி ரூ. 5/8. த. சி. தனி.

திறந்த மடல்

...கூத்தரசன்...

கனம். ஓமந்தூர்ராமசாமி அவர்கள்
சென்னை.

மதிப்பிற்குரிய பிரதமரே வணக்கம், நான் தங்களுக்கு சென்ற வாரம் எழுதிய மடலில் தாங்கள் நிச்சயம் வெற்றி பெறுவீர்களென்று குறிப்பிட்டிருந்தேன் நான்மட்டும் என்ன, மானரோஷமுள்ள ஒவ்வொரு திராவிடரும் (அவர் எக்கட்சியினராயிருப்பினும்) அவ்விதமேதான் எண்ணியிருந்தனர்.

வைத்தியநாதன்களுக்கும் வரதாச்சாரிகளுக்கும் வால் பிடித்தாலல்லாது வாழ வகையில்லையென்ற அளவில் உள்ள இனத்துரோகிகளான அரசியல் மரக்கட்டைகளும், பச்சோந்திகளும், படாத பாடெல்லாம் பட்டுங்கூட தங்களை அசைக்கமுடியவில்லை. அந்த நிலைக்கு, பொதுவாக மக்களிடையே இன உணர்ச்சி வளர்ந்து வருகிறது என்பதைத் தங்களின் வெற்றி எடுத்துக் காட்டி விட்டது.

நிற்க, தாங்கள் மீண்டும் பிரதமராக வந்ததற்காக மகிழ்ச்சியுறும் நான் அதேசமயத்தில் சிலவற்றை தங்களுக்கு எடுத்துக் கூற ஆசைப்படுவதுடன், அவைகளை நேரிய முறையில் செயலில் காட்டுவீர்களென்றும் நம்புகிறேன்.

அதாவது, தாங்கள் கடந்த 75 நாட்களுக்கு மேலாகவே முதலாளித்துவ ஆணவத்தினால் தொல்லைகளுக்குள்ளாகி வேலைநிறுத்தஞ் செய்துள்ள பஞ்சாலைத் தொழிலாளரின் நெருக்கடியைத் தீர்க்க வேண்டுகிறேன். அத்துடன் இனி எக்காரணம் கொண்டும், இவ்வித வேலைநிறுத்தங்கள் ஏற்படாவண்ணம் துவக்கத்திலேயே சரிசெய்யுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

நம் நாட்டுக் கோயில், மடங்களிலுள்ள கோடிக் கணக்கான பொருள்களை அவசியப்பட்டால் அவைகளுக்குச் சிறு தொகை ஒதுக்கிவைத்து விட்டு மற்றவைகளை பொதுச் சொத்தாக (சர்காருக்குச் சொந்தமாக)ச் செய்து அதன் மூலம் நம் தென்னாட்டின் கல்வி, தொழில் மற்றும் மக்களின் நலனுக்கான முறைகளை வளரச் செய்ய வேண்டுகிறேன்.

மூன்றாவதாக, காந்தியார் பிரிவுக்குப் பின்னர், அவரைக் கொன்ற வகுப்புவாதத்தின் திமிரானது உச்ச நிலையை அடைந்து தங்களைப் போன்ற பரம சாதுக்களிடத்தில் கூட கைவரிசை காட்டி போட்டியிட முன்வருகின்றது. அதைப் பற்றியில்லாவிட்டாலும், பொதுவாக நாட்டில் வகுப்புவாத வெறி ஒழிய வேண்டுமென்ற எண்ணம் மக்களிடத்திலே வேரூன்றி வருகிறதாகையால் அதற்கேற்ப தங்கள் ஆட்சியின் காலத்திற்குள்ளாவது அய்யர், அய்யங்கார், சாஸ்திரி, நாடார், பிள்ளை, படையாச்சி, கிராமணியார், நாயுடு, முதலியார், சௌத்ரி போன்ற ஜாதிப் பெயர்களையும், ஜாதி உயர்வுக்கான சின்னங்களையும் அணிதல் கூடாதென்பதுடன் பிராமணன்—சூத்திரன், பஞ்சமன் என்ற பிரிவுகளும் அக்கிரகாரம் பறச்சேரி என்ற வித்தியாசங்களும், "பிராமணாள்" காபி ஓட்டல் போன்ற ஜாதித்துவேஷத்தை எடுத்துக் காட்டும் வகுப்பு வாதத்திற்கு அறிவு புகட்டும் வகையில் சட்டம் இயற்றி, இவ்வித வித்தியாசங்களை மக்களிடையே அல்லது பொதுவான காரியங்களில் புகுத்தி நாட்டைக்கெடுத்து வருபவர்கள் யாராயிருப்பினும் அவர்களுக்குத் தண்டனை விதிக்கப்படும் என்று அரசியலார் சட்ட உத்திரவாகச் செய்து, தங்களின் ஆட்சி காலத்திற்குள், பார்ப்பனீய வகுப்புவாதவெறியை ஒழித்து ஒன்றே குலம் ஒருவனே தேவன் என்ற முறையில் மக்களுக்கு மனிதத்தன்மையுண்டாக்க வேண்டுகிறேன். இக்காரியங்களில் தங்களுக்குப் பெருந்துணையாக தங்களது பழைய நண்பர் திராவிடத் தந்தை பெரியார் அவர்களின் பெரும் படையினர் எப்போதும் தயாராயுள்ளனர். எவ்விதத்திலும், நம் தென்னாட்டு (திராவிடம்) விவகாரத்தில் பார்ப்பனீய வகுப்புவாத வெறியின் நயவஞ்சகம், சூழ்ச்சி, முதலியவைகள் மீண்டும் தலை காட்டா வண்ணம் செய்யாதவரையில் நம் நாட்டின் நல்வாழ்வை மனதாலும் நினைக்கவும் வழியில்லை.

எனவே அதற்கேற்ப தங்களின் ஆட்சியை நடத்திச் செல்ல வேண்டுகிறேன். தயவு செய்து காங்கிரசிலுள்ள வீபீஷணர்கள் பற்றி, சற்று எச்சரிக்கையாயிருக்கவேண்டுகிறேன், அவர்கள் வகுப்புவாத பிராமணீயத்தை விட வடிகட்டிய கீழ்த்தர மக்கள் என்பதேஎனது எண்ணம். தாங்கள் மீண்டும் பிரதமராக தேர்ந்தெடுக்கப்பட்டதற்கு எனது மகிழ்ச்சியைத் தெரிவிப்பதோடு தங்களைத் தேர்ந்தெடுத்த காங்கிரஸ் சட்ட சபை உறுப்பினர்களுக்கும் நன்றி கூறுகிறேன். தங்களது முயற்சி வெல்க!

"கூத்தரசன்"

கனம். ரபி அகமத் கித்வாய்

புது டெல்லி.

மத்திய சர்க்கார் (செய்தி போக்கு வரத்து) மந்திரியாரே வணக்கம், தாங்கள் 27-ந் தேதி "நேஷனல் ஹெரால்டு" பத்திரிகையில் எழுதியிருந்த கட்டுரையில் ஒரு ஜன நாயக சர்க்கார் திறமையாக வேலைசெய்ய வேண்டுமானால், மக்களின் மனப்பான்மையை அறிந்து, சர்க்காரின் கொள்கையில் குறையிருக்குமானால் அதை எடுத்துக்கூறுவதற்காவது ஒரு எதிர்கட்சியிருந்தேயாகவேண்டும் என்றும், 'காங்கிரஸ் ஒரு முன்னேற்பாடான கட்சியாக புனரமைக்கப்படாவிட்டால் எல்லா முற்போக்கு சக்திகளாலும் எதிர்க்கக்கூடிய பிற்போக்கு சக்தியாக காங்கிரஸ் ஆகிவிடும்" என்றும் வெளிப்படையாகக் குறிப்பிட்டிருக்கின்றீர்கள்.

தங்களின் இவ்வறிவுரையை தாங்கள் பதவிவகிக்கும் பட்டேலிஸம் ஏற்றுக்கொள்ளுமானால் நாட்டின் அமைதிமட்டுமல்ல மக்களின் வாழ்வும் செம்மையுறும்.

ஆனால் பாஸீஸத்தையே பிறப்புரிமையாகக் கொண்டு ஏகாதிபத்தியத்திமிருடன் ஆட்சி செலுத்திவரும் இன்றைய ஆட்சி பீடந்தாங்கிகளுக்குத் தங்களைப் போன்றோரின் கருத்து கசப்பாய்தானிருக்கும். நாட்டில் வேறு எந்தக் கட்சியு மிருக்கக் கூடாது; தாங்கள் இட்டதே சட்டம் என்ற இட்லரிசம் என்ன கதி அடைந்ததோ அந்த நிலைக்கு ஆகஸ்டு சுயராஜ்யம் இலக்காகி விட்டது. அதை மிக நாசுக்காகத் தாங்களும் இடித்துக் கூறியிருக்கிறீர்கள்; காங்கிரஸ் விரைவில் பிற்போக்குக் கட்சியாக மாறிவிடுமென்று.

ஆட்சி பீடத்தை நூற்றுக்கு 80 சதவிகிதம் பிற்போக்குக் கும்பல் அலங்கரித்துவரும்போது ஆட்சிமுறை அதற்கு அண்ணனாகத்தானேயிருக்க முடியும்? எனவே தாங்களும் அந்த பட்டியலிலே இருந்துக் கொண்டு ஊராருக்கு உபதேசம் செய்வதைவிட, வெளியேவந்து மக்களின் நன்மைக்கான காரியங்களில் ஈடுபட வேண்டுகிறேன்.

"கூத்தரசன்"

ஃ ஃ

தோழர் ஜி. டி. நாயுடு அவர்கள்

கோயமுத்தூர்.

திராவிடத்தின் தொழில் நிபுணரே, வணக்கம், தாங்கள் கோவையில் சர் சி. வி. ராமன் அவர்களுக்கு அளித்த வரவேற்பின் போது அரசியலாருக்குச் சில அறிவுரைகளை எடுத்துக் காட்டி இடித்துக் கூறியிருக்கிறீர்கள், எனினும் இன்றைய வட நாட்டுப் பாஸீஸ ஆட்சிக்குக் காது செவிடு என்பதைத் தாங்கள் அறியவில்லை போலும்.

கோவையில் நடைபெறும் வேலை நிறுத்தத்தைப் பற்றித் தாங்கள் அன்று பேசுகையில், சர்க்காரே வேலை நிறுத்தத்தை முடிக்க முற்படவில்லையென்றும் முதலாளிகள் அல்லது தொழிலாளர்மீது குறை கூறமுடியாதென்றும் குறிப்பிட்டிருக்கின்றீர்கள் இது முற்றிலும் உண்மை இன்றைய 'சர்க்காரின் கையாலாகாத பயங் கொள்ளித்தனமே பல முதலாளிகளின் பிடிவாதத்துக்கும் பேராசைக்கும் பக்க பலமாயிருக்கிறது. அது மட்டுமல்ல, அரசியலார் தெரிந்தோ தெரியாமலோ அல்லது அனுபவ ஆற்றல் குறைவினாலோ சில அரசியல் செல்லாக் காசுகளை ஏவி விட்டு போட்டி சங்கங்களைத் துவக்கி உழைத்து உருகுலைந்து ஒரு பலனு மறியாமல் ஏங்கிக் கிடக்கும் தொழிலாளரிடையேயும் பல பிரிவுகளையும் வீண் தொல்லைகளையும் உண்டாக்குவதோடு, இக் கும்பல் மறைமுகமாக முதலாளித்துவத்திற்கும் ஏஜெண்ட்களாக யிருந்து வருகின்றது என்றுங் கூறுவேன்

தவிர தொழில் நிலையங்களைத் தேசிய மயமாக்குவதில் மத்திய சர்க்கார் தென்னாட்டைப் புறக்கணித்து வருவதையும் மக்களுக்கு அவசியமான தொழிற்சாலை ஒன்றைக் கூட வட நாட்டுச் சர்க்கார் தென்னாட்டில் உண்டாக்க முன்வரவில்லையென்றும், இவ்விதமான நிலைவளருமானால் சென்னை சர்க்காருக்கு தொழில் நிலையங்களை தேசிய மயமாக்கும் திட்டத்தின் மூலம் பெரும் நஷ்டமேற்படுமென்றும் எச்சரித்துக் காட்டியிருக்கின்றீர்கள்.

தங்களின் இவ்வரிய அனுபவ உரை நம் மாகாண அரசியலாருக்கு வழிகாட்டியாக இருந்தாலும், வட நாட்டுச் சுரண்டல் ஆட்சிக்கு அடங்கியிருந்தாலொழிய தங்களின் பதவிகள் பறந்தோடி விடும் என்ற பரிதாப நிலையிலுள்ள நம் மாகாண மந்திரிகள் என் செயவர் பாபம். என்றாலும் தங்களைப் போன்ற அறிஞர்களின் சொல்லையும், செயலையும் நடை முறையில் ஏற்கக் கூடிய ஆட்சி விரைவில் நம் நாட்டில் ஏற்பட்டே தீரும் என்பதில் ஐயமில்லை.

அதுவரை தங்களைப் போன்றோர் ஆட்சியாளருக்கும், பொதுவாக நாட்டு நலனுக்குமானவற்றை எடுத்துக் கூறிவர வேண்டுகிறேன்.

"கூத்தரசன்"

வெற்றி 10வதுண்டு ஆரம்பம் உயர்வார மாதாஇதழ் 1000 சந்த தேவை.

வருட சந்தா 8-அணா போஸ்டல் ஆர்டராக அனுப்புக ஏஜண்டுகள் டிப்பாஸிட் ரூ 2 அனுப்பவும். விளம்பரம் செய்யுங்கள். வெற்றி. திருநெல்வேலி, சீமை.

★ திராவிடன் ★

சென்னை 4-4-48 ஞாயிறு

போலீஸ்மந்திரி புலம்பலும் சலசலப்பும்

சென்னை சட்ட சபை காங்கிரஸ் கட்சித் தலைவர் தேர்தலின் காரணமாக தேர்தலுக்கு முன்னும், பின்னும் காங்கிரசாரிடையே ஏற்பட்ட பல சம்பவங்களைக் கவனிக்கும்போது நம் நாட்டு அரசியல் எவ்வளவு கீழ்த்தரத்திற்குச் சென்றுக் கொண்டிருக்கிறதென்பது வெளிப்படையாகக் காட்சி யளிக்கின்றன.

இத் தேர்தலில் குறிப்பாகக் கூறவேண்டுமானால் ஒருவித லட்சியமுமின்றி எடுப்பார் கைப்பிள்ளைகளாக யிருந்து அரசியல் பிழைப்பு நடத்தி வரும் அநாமதேயங்களைப் பற்றி நாம் கவலை கொள்ளவில்லை. பொறுப்பு வாய்ந்தவர்களாகக் கருதப்படுபவர்கள் மேற் கூறிய அநாமதேயங்களைவிட மோசமாக நடந்துள்ளார் களென்றால் இதற்கு எதை உவமை காட்டுவது என்று கேட்கிறோம்.

கனம். ஓமந்தூரார் அவர்கள் மீண்டும் பிரதமராக வரக்கூடாதென்பது, பார்ப்பனீயத்தின் இடைவிடா வேலையாகயிருந்து வந்தது. காங்கிரஸ் சட்ட சபை உறுப்பினரான ஒரு பார்ப்பனரை மற்றொரு பார்ப்பனரைப் பார்த்து, “நீ பிராமணன் என்பதை மறந்து விடாதே எக்காரணங் கொண்டும் ரெட்டியாருக்கு ஓட்டு போடாதே” என்று எச்சரிக்கை செய்யும் அளவுக்கு பார்ப்பன நண்பர்கள் கட்டுப்பாடாக வேலை செய்ததாகவு'ர் கூறப்படுகிறது. இதையும் நாம் குற்றமென்று கூறவதற்கில்லை. ஒரு திராவிடர் அரசியலில் தலைவராகயிருப்பதை பார்ப்பனீயம் பார்த்து சும்மாயிராது எவ்விதத்திலும் அதை சிதறடிக்கச் செய்வதே தனது கொள்கையாகக் கொண்டிருக்கிறதென்பதை 1924-ல் திராவிடத் தந்தை பெரியார் அவர்கள் காங்கிரஸ் தலைமைப் பீடத்திலிருந்து வெளியேறியது முதல் இன்று ஓமந்தூரார் வரைக்கும் பார்த்து வருகிறோம், பார்த்து வருவது மட்டுமல்ல கடந்த 25 ஆண்டுகளின் அரசியல் சரித்திரம் எடுத்துக் காட்டும் உண்மையுமாகும், அவ்வளவு வகுப்பு வாத வெறி பார்ப்பனீயத்துக்கு பரம்பரை சொத்தாக நிலைத்துவிட்டது. எனவேதான் கனம் ஓமந்தூராரையோ அன்றி தோழர். காமராஜர் அவர்களையோ பார்ப்பனீயம் காலை வாரிவிடுவதைப் பற்றி நாம் குற்றம் கூறுவதற்கில்லை. அது பார்ப்பனீயததின் திருந்த முடியாத புத்தியாகிவிட்டது.

ஆனால் திராவிட இனத்தில் தோன்றிய காங்கிரஸ் திராவிடர்கள் அல்லது (பார்ப்பனரல்லாதார்) தேசியத் திராவிடர்கள் என்போரில் சிலர் பார்ப்பனீயத்தின் நயவஞ்சகத்துக்கும் சூழ்ச்சிக்கும் அன்று முதல் இன்று வரை அடிமைப் பட்டு தனது இனத்தைக் காட்டிக் கொடுக்கும் அற்ப புத்தியைக் கொண்டிருப்பதைக் கண்டு வருந்தாமலிருக்க முடியவில்லை.

ஓமந்தூரார் தேர்தலுக்கு இரண்டு தினங்கள் முன்பு வரையும் ராஜாஜி கட்சியாருடனிருந்து ஓமந்தூராருக்கு எதிரிடையாக காரியங்கள் செய்து பாச்சா பலிக்காமல் போகவே கடைசி நேரத்தில் ஓமந்தூரார் பக்கம்சேர்ந்துவிட்டதாகபோலீஸ் மந்திரிடாக்டர் சுப்பராயன் மீது தோழர். வைத்திய நாதய்யர் வகையறு குற்றஞ் சாட்டியிருக்கின்றனர் என்று தெரிகிறது.

தேர்தலுக்கு முன் தினம் இரவு வைத்திய நாதய்யர் ஜாகையில் நடைபெற்ற ராஜாஜி கட்சிக் கூட்டத்திலுங்கூட கனம் டாக்டர் சுப்பராயன் “தன்னை இம்மந்திரி சபை மதிக்கவில்லையென்றும், மானக் குறைவாக நடத்தியிருப்பதாகவும், இது நீதியாகுமா” என்றும் ஒப்பாரி வைத்து புலம்பினாராம் அவ்வளவு உச்சநிலையில ஆவேசத்துடனிருந்த டாக்டர் சுப்பராயன் கடைசி நேரத்தில்தன்னை மதிக்காத ஓமந்தூர் மந்திரி சபைக்கு ஏன் துணையாய் நின்றாரென்பதற்குப் பல காரணங்கள் கூறப்படுகின்றன. அதைப் பற்றியும் நாம் கவலை கொள்ளவில்லை.

எந்த காரணத்தினாலோ கனம் டாக்டர் சுப்பராயன் அவர்கள் இத் தேர்தலைப் பொறுத்தவரையிலாவது திராவிடத்தின், தமிழ் நாட்டின் துரோகிகளின் பட்டியலில் இடம் பெறாத அளவுக்கு நேர்மையுடன் நடந்துக்கொண்டதைப் பற்றி நாம் பாராட்டுகிறோம்.

எனினும் டாக்டர் சுப்பராயன் அவர்களின் புலம்பலிலிருந்து தோன்றிய ஞானோதயம் அடுத்த நிமிடமே பறந்துபோய்! பழைய கருப்பன் போன்றுகருப்பன்பபார்ப்பனீயத்துக்குப் பரிந்து பேசு முன்வந்துள்ளார்.

அதோடு மட்டும் நின்றாரில்லை. பார்ப்பனீயத்துக்கு வக்காலத்து

பேசும் அவர் மற்றவர் களிடம் சலசலப்பு காட்டவும் மறந்து விடவில்லை.

ஓமாந்தூரார் தேர்தல் முடிவு தெரிந்தவுடன் சர்க்கார் மாளிகையிலே கூடியுள்ள காங்கிரஸ் திராவிடர்கள் பார்ப்பணீய சூழ்ச்சியை எதிர்க்கும் வகையிலும், அதன் தோல்வியைப் பற்றியும் முழக்கஞ் செய்தனராம்.

இதைக்கண்ட கனம் சுப்பராயனுக்குக் கோபம் பொத்துக் கொண்டுவந்துவிட்டது போலும். அடுத்தாள் பத்திரிகைளில் பிராமணத்துவேஷம் கூடாது என்று காங்கிரஸ் திராவிடர் களையும், பொதுவாக திராவிட இனத்தவர் களையும் சல சலப்பு மூலம் மிரட்டியுள்ளார்.

அடிக்கடி பிராமணத்துவேஷம் கூடாதென்று கூறும் கனம். சுப்பராயன் பிராமணத்துவேஷம் எதனால் நிலைத்திருக்கிறதென்பதைத் தெரிந்து கொள்ளும் அறிவற்றவர் என்று நாம் கூறுவதற்கில்லை.

இந்நாட்டுக் குரியவர்களான பெரும் சமுதாயத்தினர், இந்நாட்டுப் பொதுவாழ்வில் தலைமை தாங்குதல் கூடாது; ஆண்டால் பரங்கியம் இல்லா விட்டால் பார்ப்பணீயம் ஆள வேண்டும் என்ற அளவுக்கு இன்று நேற்றல்ல கடந்த பல்லாண்டுகளாக நம் நாட்டு அரசியல் பிராமணர்களுக்கு இருந்துவரும் பழக்க வழக்கத்தாலல்லவா, தென்னாட்டைப் பொறுத்தவரை வகுப்பு வாதம் தோன்றிவிட்டது.

இவ்வுண்மையை மறுக்க போலீஸ் மந்திரியாருக்குத் தைரியமிருந்தால் வரட்டும்; அறிஞர்கள் கூடும் பொதுமேடைக்கு; அங்கே எடுத்துக் கூறட்டும் யார் இந்நாட்டின் அரசியல், சமுதாய, பொருளாதார விவகாரங்களில் வகுப்பு வாதத்தை ஜாதி ஆணவத்தை, நயவஞ்சக சூழ்ச்சியை கடந்த 25 ஆண்டுகளாக கடைப் பிடித்து வருபவர்கள் என்று.

அதை விடுத்து தொட்டதற்கெல்லாம் வகுப்பு வாதப் பூச்சாண்டியைக் காட்டி "வகுப்பு வாதி"களுக்கு வக்காலத்துவாங்க முன் வருவது அரசியல் வரலாறு அறியாத அண்ணாமலைகளுக்கு அழகாயிருக்கலாம்.

ஆனால் அறிவு படைத்த போலீஸ் மந்திரி இவ்வாறு ஒரு குறிப்பிட்ட இனத்தவர் களுக்காக வழி தவறி வக்காலத்து வாங்குவது விவேகமான காரியமாகாது.

நீட்டிய மரத்தில் கூர் பார்ப்பது போன்று திராவிடர் கழகத்தினரிடம் சல சலப்பு காட்டி வருவதோடில்லாமல் — போலீஸ் மந்திரி சுப்பராயன் அவர்கள் காங்கிரஸ் திராவிடர்களையும் "பிராமணத் துவேஷம்" போர்வையின் மூலம் சல சலப்பு காட்டுகிறார்.

ராஜாஜி கோஷ்டியாருக்குக் கடைசி நேரத்தில் செய்த துரோகத்திற்காக இவ்வாறு அறிக்கை விடுவதின் மூலம் வைத்தியநாத வாதாச்சாரிகளைத் திருப்தி செய்து விடலாமென்று கனம் சுப்பராயன் கருதுகின்றார் என்றும் கூறப்படுகிறது. இந்த சமாதானமுங் கூட நொண்டிச்சாக்கேயாகும்.

உண்மையிலேயே வகுப்பு வாதத்தை வளர்த்து வரும் கும்பலைப் பற்றித் தட்டிக் கேட்கமனமில்லாத போலீஸ் மந்திரியார் மற்றவர்களை மிரட்டுவதென்பது எத்தனை நாளைக்குப் பயன் தரும் அல்லது பலிக்கும் என்று கேட்கிறோம்.

மந்திரி சபை என்றால் இதற்கு முன்பெல்லாம் இருந்துவந்தமதிப்பும், மரியாதையும், சுயநலக் கூட்டத்தின் ஒழுங்கற்ற நடத்தையினால் சந்திசிரிக்குமளவுக்கு வந்துள்ளதைக் கண்டு பொதுவாக நாட்டு நலனில் அக்கரையுடையோர் வருந்தியே தீருவர்.

அவ்வித போக்கு மேலும் வளர்ந்து நம்நாட்டு அரசியலே ஆபாசக் களஞ்சியமாக ஆகாதிருக்க வேண்டுமானால் கனம். சுப்பராயன் போன்றவர்கள் இனியாகிலும் அரசியல் பச்சோந்திகளுக்கு ஆக்கந்தராமல் ஓரளவாவது நீதியுடன் நடக்க வேண்டுகிறோம்.

இல்லையெனில் அவர்வகித்துள்ள பொறுப்பான பதவியை விட்டு வெளியேறி வீண் மிரட்டலிலும் சல சலப்பிலுமே காலந் தள்ளட்டும் அதைப்பற்றி எவரும் பொருட்படுத்தப் போவதில்லை.

திராவிடர்கழகத்திராவிடர், காங்கிரஸ் திராவிடர், கம்யூனிஸ்ட் சோஷலிஸ்ட் முதலிய எல்லாத் திராவிடர்களும் போலீஸ் மந்திரியாருக்கு பிராமணத் துவேஷிகளாகக் காட்சி யளிக்கின்றனரென்றால் அவரது தற்கால அரசியல் கண் பொட்டையாயிருக்க வேண்டும் என்றே கருதுகிறோம்.

பரங்கியத்துக்கும் பார்ப்பனீயத்துக்கும் உரித்தான மிஞ்சினால் கெஞ்சுவதும், கெஞ்சினால் மிஞ்சுவதுமான குணம் போலீஸ் மந்திரி சுப்பராயன் அவர்களுக்கும் உரித்தாகி விட்டதோ என்றுகூட சந்தேகிக்க வேண்டியிருக்கிறது.

இவ்வளவும் போதாதென்று டாக்டர் சுப்பராயன் ராஜினாமா நாடகம் வேறு துவக்கியுள்ளார்.

திருவண்ணாமலை பஸ் தொழிலாளர் வேலை நிறுத்தம்.

திருவண்ணாமலை பஸ் தொழிலாளர் இம்மாதம் 4-ந் தேதி

யிலிருந்து வேலை நிறுத்தம் செய்யப்போவதாக நோட்டீஸ் கொடுத்துள்ளனர்.

தொழிலாளரின் வேலை நிறுத்தக் கோரிக்கை ஒன்றும் பிரமாதமானதென்றும் கூறுவதற்கில்லை. பஸ் முதலாளிகள் தங்களை அடிமைப்போன்று நடத்துவதாகவும் போனஸ் கொடுக்கப்பட வேண்டுமென்றும். சம்பள உயர்வு வேண்டுமென்றும் கேட்டிருப்பதாகத் தெரியவருகிறது இக்கோரிக்கையை ஏறத்தாழ நிறைவேற்றுவதில் முதலாளிகளுக்கு ஒன்றும் குடிமுழுகிப்போய்விடாது.

தவிர முதலாளிகளுக்கு எப்போதுமே துவக்கத்தில் நல்ல புத்தி ஏற்படுவதென்பது அவர்களது அகராதியிலே கிடையாது. என்றாலுங்கூட திருவண்ணாமலையைப் பொறுத்தவரை சமீப காலமாக் நடைபெற்ற கலவரங்களையும் அதன் காரணமாக ஏற்பட்டுள்ள நஷ்டங்களையும் கவனிக்கும்போது, மீண்டும் இவ்வித வேலை நிறுத்தங்களினால் வீண் தொல்லைகள் ஏற்பட்டு பொதுமக்களின் அமைதி சீர்குலையாமல் இருக்குமாறு செய்ய வேண்டுவது அரசியலாரின் நீங்காக்கடமையாகும் என்பதை வலியுறுத்திக் கூறுகிறோம்.

எனவே கணவனை இழந்தபின் புத்திவந்த காரிகையின் கதைக்கு உவமையாகாமல் அரசியலார் உடனடியாக திருவண்ணாமலை பஸ் தொழிலாளர் குறைகளைத் தீர்க்க முன் வரவேண்டுகிறோம். நிலைமை முற்றியபின் மந்திரிகள் விஜயஞ்செய்வதும், விசாரணைக் கமிட்டி வைப்பதுமான பத்தாம் பசலிவழக்கத்தை இதுவிடயத்திலும் கையாண்டு முதலாளித்துவத்திற்கு முகமூடியணிய வேண்டாமென்று எடுத்துக் காட்ட ஆசைப்படுகிறோம்.

நிற்க, வேலை நிறுத்தஞ்செய்துள்ள தொழிலாளத் தோழர்களும் அமைதியை இழக்காமல் தங்களது உரிமையைப் பெற ஆவண செய்ய வேண்டுகிறோம் நாடு இன்றுள்ள நிலையில் எக்காரணங்கொண்டும் அமைதிக்கு பங்கம் ஏற்படுத்தக்கூடாதென்பதை பஸ் முதவாளிகளும் உணர்ந்து தொழிலாளர்த் தோழர்களின் கோரிக்கையை உடனே தீர்த்துவைப்பார்களென்று நம்புகிறோம்.

ஒரு சந்தேகம் ?

கனம் ஓமந்தூரார் அவர்களின் வெறிக்குப்பின் ராஜாஜி கட்சி சுபமுகூர்த்தத்தில் கலைக்கப்பட்டு, வைத்தியநாதய்யர்வாளின் சீர்திருத்தக்கட்சி அமைக்கப்பட்டுள்ளதாம்

அக்கட்சியில் சேரும் சட்டசபை உறுப்பினர்கள் இனி மது அருந்துவதில்லை, லஞ்சம் வாங்குவதில்லை, பர்மிட்டுக்காக சிபார்சு செய்வதில்லை, வகுப்புவாதத்தை மனதாலும் நினைப்பதில்லை என்று இவ்விதமாக பல உறுதிமொழிகள் சொல்லாலும் எழுத்தாலும் உறுதிமொழி கொடுக்கின்றனராம். மிகவும் பாராட்டத்தக்கது தான் இப்பரீட்சை.

ஆனால் ஒரு சந்தேகம்; இனிமேல் லஞ்சம் வாங்குவதில்லை மது அருந்துவதில்லையென்றால், ராஜாஜி கோஷ்டியிலிருந்தவர்கள் இதுவரை லஞ்சம் வாங்கியும் மது வருந்தியும், பர்மிட்டுக்காக பாடுபட்டும் வந்திருந்தனரா?

இல்லையெனில் "இனிமேல்" என்ற வாசகத்துக்கும், உறுதிமொழி கூறவேண்டிய நிர்ப்பந்தத்திற்கு அவசியம் என்ன?

இச்சந்தேகத்தைப் புதிய கட்சியின்கர்த்தா தோழர் வைத்தியநாதய்யர் விளக்கினால் நன்மை பயக்கும் என மாஜி சட்டமறுப்பியக்கத் தோழர் ஒருவர் கடாவுகிறார்.

குரு களிம்பு

Guru Ointment

பத்து, படை சகல சர்ம ரோகங்களுக்கும் குணம் தெரியும்

விலை 14 அணா

டாக்டர். ஏ. மதுராம் ஸன்ஸ்

தருமமருந்து சாலை... திருச்சினாப்பள்ளி.

தூத்துக்குடி மாகாண 18 வது மாநாடு

மே 1, 2—ந் தேதிகளில் நடைபெறும்

முழு விவரம் அடுத்த வாரம்

கே. வி. கே. சாமி.
செயலாளர்,

திராவிடர் இலக்கியம் :

பல் கலையுணர்ந்த பல்சான்றீரே!

—பூ. கணேசன், B. A., (Hons.)

தமிழ்ப் பெரும் புலவர் எழுப்பிய பிரச்னைகளுக்கு சமாதானத்தைத்தரும் வகையில், முதல் முதலாக விடுத்த முடங்கலை கடந்த வாரம் வெளியிட்டேன். அடுத்து விடுத்த முடங்கல் அடியிற்கண்டவாறு:

பன்மொழிபறிவும் பல் கலை நுணுக்கமும் பாங்குடன் பெற்று வீறு பெற்றுயர்ந்தோய்!

எளியேனது நேற்றைய முடங்கலைப் பெற்றிருப்பீர்களென நம்புகிறேன், விரிவஞ்சி, அத்துடன் முடித்துக் கொண்டேன். தங்களுக்குள்ள பல் துறை வேலைகளிலும், எளியேனது முடங்கலைப் படித்து முடிவொன்றுக்கு வர கால வசதியிருக்குமோவென ஐயுறுகிறேன் எனினும், எளியேனை ஒரு பொருட்டாய் மதித்து, இப்பிரச்னைகளையெழுப்பியதங்கட்கு எனது முடிவுகளைக்கூற கடமைபட்டே இருக்கின்றேன்.

தகுமுறையில் தமிழெல்லை அறிந்தோய்! கம்பரை எங்கள் கட்சி வம்புக்கிழுப்பதாகத் தாங்கள் கூறியமைக்கு எனது சமாதானத்தை முந்திய முடங்கலில் தெளிவு படுத்தினேன். இப்பொழுது தங்களின் அடுத்தக் கூற்றை ஆராயமுற்படுவேன்.

தமிழ் இலக்கியத்திலேயே கலை நூற்புலமைப்பட்டம் பெற்றிருப்பதாகக் கூறும் தாங்களும் இதுபோன்று ஆபாசமாகப்போக்க கூடாது’’ என்று என்னை அன்றைய தினம் கடற்கரையில் இடித்துக் கூறினீர்கள். கம்பனைக் கல்வியில் கவித்துவத்தில் தலைசிறந்தவனாகக் கருதித் தங்கள் போன்ற தமிழ்ப் பேரறிஞர்களே பிரசாரஞ்செய்து வருகையில், பாதுகாத்து வருகையில், எங்கள் போன்ற ஒரு சிறு கூட்டம் அக்கம்பனையே புரை பட்டப் புலவன் என்கிற தென்றால், அக்கம்பனைப்பஜிக்கும் திருக் கூட்டத்தை என்னவென்று கருதும் என்பது தாங்களறிந்ததே அன்றைய தினம் தங்களது கூற்றால் எனது உள்ளம் பெரிதும் நொந்ததேயாயினும், ஆத்திரம் அடைந்ததேயாயினும், தங்களது சான்றாண்மையும் நரையும் மூப்புமே எனது பொறுமையை இழக்காவண்ணம் தடுத்தனவென்பதை மறுமுறையும் பணிவுடன் கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

தமிழ் இலக்கிய கலை நூற் புலமைப்பட்டம் பெற்றிருப்பதால், கம்பனைப் போற்றிப் புகழ்ந்து பூஜிக்க வேண்டுமென்று தாங்கள் கருதுவது தகுதியும் முறையுமல்ல வெனக் கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன். கலை நூற் புலமை யெய்திவிட்டால், கருத்திழந்து, கபோதியாகப் போய் விட வேண்டுமென்ற எண்ணம் தங்கட்கு எத்துணையும் இராதென்றே நம்புகிறேன்.

கலை நூற் புலமை பெற்றுவிட்டால் பகுத்தறிவை இழந்துவிட வேண்டுமென்று தாங்கள் கூறிவீர்களென நான் நினைக்கவேயில்லை. கலை நூற் புலமைப் பெற்றுவிட்டால், தன்மானத்தை, தன்மதிப்பை அறவே ஒழித்துவிட வேண்டுமெனத் தாங்கள் கருதுவீர்களென என்னால் நம்பவே முடியவில்லை. கலை நூற் புலமைப் பெற்றுவிட்டால், சுயமரியாதையை இனவுணர்வைப் பற்றி எள்ளளவும் எண்ணத்தாலும் தீண்டுதல் கூடாதென தாங்கள் செப்புவீர்களென என்னால் நினைக்க முடியவில்லை. பின்னர் எதனால், அப்படி கூறினீர்களென்றும் அறியாது தவிக்கிறேன்.

கற்றுத் துறை போகிய நற்றமிழ்ச் செல்வரே! நான் பெற்ற கலை நூற்புலமைப்பட்டத்துக்குப் பாடப்பகுதியாக, நான் கம்பனது ராமாயணத்தை மட்டும் படிக்கவில்லை. நற்றிணை படித்தேன், நல்ல குறுந்தொகை படித்தேன், கவினுறுஐங்குறுநூறு படித்தேன், ஒத்த பதிற்றுப்பத்து, ஓங்கு பரிபாடல், கற்றறிந்தோர் எத்தும் கலித்தொகை படித்தேன் அகம், புறம் படித்தேன் இவை மட்டுமல்ல, இன்னும் பத்துப்பாட்டு படித்தேன், பஞ்சகாவியம் படித்தேன்; எல்லாவற்றுக்கும் முந்திய தொல்காப்பியம் படித்தேன்! யாவற்றுக்குஞ் சிறந்த திருக்குறள் படித்தேன். இவ்வளவுப் படித்த பின்னர்தான் கூறுகிறேன், கம்பன் ‘‘கயவன்’’ என்று. இதனால் தாங்கள் எனது புலமையில் ஐயுறலாம், தாங்களும் ஒரு மாபெரும் புலவரென்ற காரணத்தால். ஆனால் எனது பகுத்தறிவு காட்டும் பாதையில் தான், நாட்டு, இனத்து வரலாற்று அறிவு காட்டும் பாதையில் தான் எனது கருத்தை அமைத்துக் கொண்டிருக்கிறேன் என்று கூறிக்கொள்ள விழைகிறேன்.

கம்ப ராமாயணத்தைக் குறை கூறும் அறிவியக்கத்தார் கம்பனது இனவுணர் வற்றதன்மையை, வீபிஷ்ண புத்தியை, காட்டிக் கொடுக்கும் கோடரி மனப்பான்மையை மட்டும் கண்டித்து, தங்களது கருத்தை எடுத்துக் கூறுகின்றனர். ஆனால் நான் இன்னும் ஒரு படி அதிகமாகச் செல்லவே ஆசைப்படுவேன். கம்பன் ஒரு புலவனல்லன்; ‘‘நட்டியங்

காரனே" என்பது எனது தேர்ந்த முடிவு. கம்பன் புல்மை மிக்கவன் அல்லன் என்பது சுயமரியாதை இயக்கத்தினுடையவோ, திராவிடர் கழகத்தினுடையவோ கூற்று அல்லவென்பதையும் எம் போன்ற தமிழ் இலக்கியம் படித்த, அவ்வியக்கங்களோடு தொடர்புடைய இளைஞர்களின் முடிவே என்பதையும் தங்களுக்குத் தெளிவு படுத்த விரும்பிகிறேன். கம்பராமாயணத்தைப் படித்து மட்டும் நாங்கள் இம்முடிவுக்கு வரவில்லை. தமிழரின் கருவூலங்களாகத் திகழும் உயர் தனிச் செம்மைத் தமிழிலக்கியங்களை ஓரளவு தெளிவாகப் படித்த பின்னரே, அவற்றைக் கம்பராமயணத்தோடு ஒத்திட்டு பார்த்த பின்னரே தான் இச்சீரிய முடிவுக்கு வந்தோம்.

நெறி திரிம்பா ஆராய்ச்சி வல்லோய்! சங்கஇலக்கியங்களில்இல்லாதஉயர்ந்ததொருசுவைகம்பராமயணத்தில்திகழ்கிறதெனத்தாங்கள் கூற முடியுமா? சங்க இலக்கியத்தில்வீசும்தன்மானத்தமிழரின் உண்மை மணத்தின் ஒரு அணுவளவாகிலும் கம்பராமாயணத்தில் வீசுவதாகக் கூறமுடியுமா?

இலக்கியம் வல்ல செம்மலே! திருக்குறளில் எடுத்துக்காட்டப் பெறாத ஒரு கருத்து, திருத்தக்க தேவரின் "சிந்தாமணி"யில் காணப்படாத ஒரு கவிநயம் கம்பராமாயணத்தில் காணப்படுகிறதென்று தாங்கள் எடுத்துக்கூற இயலுமா? நல்லது கெட்டது நன்குணர்ந்தோய்! எங்கள்போன்றாரின் போக்கைக் கண்டு தமிழ்ப் புலவர் உலகமே விதிர்ப்புற்று, நடுக்குற்று, மயக்குற்று நிற்பதாகக்குறிப்பிட்டீர்கள். இதற்கு நான் ஒரேஒரு எடுத்துக்காட்டை மட்டிலும் இங்குகாட்டிப் விட்டு, போனக் கருத்துக்களை அடுத்த முடங்கலில் எழுதுவேன்.

பேரன்புடையீர்! தமிழ்ப்புலவர் உலகத்தே ஒரு பிரதிநிதியாகத் திகழும் அண்ணாமலைப் பல்கலைக் கழகத் தமிழாசிரியர் பெருந் தகை, திருமிகு ஔவை சு. துரைசாமி யவர்கள் அறிஞர் அண்ணாதுரை, என்ற தொகுப்பு நூலில், "சீரிய கூரிய தீஞ்சொல்" என்ற தலைப்பில் தந்திருக்கும் அடியிற்கண்ட கருத்தைத் தங்களது பார்வைக்கு வைக்கிறேன்:

"இதிகாசங்களும் புராணங்களும் மக்கள் வாழ்வைச் செம்மைசெய்யும் வகையில் அமைந்து பாக்களினும் கடைப்பட்ட நிலையை யடையச் செய்யாதபடி ஆக்கம் புரிவன வாயிருப்பின் அவற்றைப் புறங்கூறுதல் குற்றமே யாகும். இதிகாச புராணங்கள் இவ்வியல் புடையவாய் இருக்கின்றனவா என்பது அறிவுடையோர் அறிவால் அறிய வேண்டுவதொன்றாகும். இவைகள் மக்களிடத்தில் ஒரு கூட்டம் மட்டில் பசியும் வறுமையுமின்றி இன்ப வாழ்வு வாழ்வதற்கு ஆக்கமும் அரணும் தருவனவாய் இருப்பதை அறியாதவர் அறிவில்லாதவரே யாவர்.

"இப் புராண இதிகாசங்கள் ஒரு காலத்தில் மக்களுக்கு மனதில் கடவுள் பால் அன்புண்டாக வேண்டியும், அன்பு நெறி (பக்தி மார்க்கம்) நிலைப்பது வேண்டியும் ஏற்படுத்தப் பட்டிருக்காலம். இவற்றிற்குத் துணையாக நாயன்மார்களும் ஆழ்வார்களும் பாடிய தோத்திரப் பாட்டுகள் ஆயிரக் கணக்கில் உண்டாகி யிருக்கின்றன. இவற்றால் ஒரு நல்ல பயன் உண்டாகியும் இருக்கிறது.

நாட்டில் ஆயிரக்கணக்கில் கோயில்கள் உண்டாய் விட்டன. கோயில்கட்குச் செல்வத்திலும் குறைவில்லை. ஆண்டு தோறும் நமது மாகாணத்தில் சுமார் 5 கோடி ரூபா இக் கோயில்களில் அன்பு நெறியின் பெயரால் செலவாகிறது. இந் நிலையில் புராண இதிகாசங்களின் நோக்கமும் ஓரளவு நிறைவேறி விட்டதென்றே கூறிவிடலாம்.

"இனி, இவ்வளவு பொருள் ஆண்டுதோறும் செலவாகிய வழியும், நாட்டில் சமய அறிவும், ஆன்ம நேய ஒருமையும் தோன்றவேயில்லை. சாதி சமய வேற்றுமைகள் பெருகின. வேற்றுச் சமயங்கள் தோன்றி அரசியலுரிமையிலும் பங்கு கொண்டன. மேற் கூறிய ஐந்து கோடி ரூபாவில் சுமார் மூன்று கோடி ரூபா ஒரு சமுதாயத்தின் நலத்துககே சென்று சேர்கிறது. சுருங்கச் சொன்னால் இந்த ஐந்துகோடி ரூபாயில் மூன்று நான்கு கோடி ரூபா ஆற்றில் கரைத்த பெருங் காயமாய் ஒழிகிறது. இதனை ஒழுங்கு செய்து மக்கட்கு நேரிய முறையில் பயன் படுத்துவதற்கு இப்புராண இதிகாசங்கள் துணையாகவில்லை. இப் புராண இதிகாசங்களைப் படித்தவரும் படிக்கக் கேட்டவரும் மேற் கூறிய வற்றை அறியும் அறிவு பெறவில்லை. பொருட் கேடுதான் ஆண்டு தோறும் காணப்படுகிறதேயன்றி, மக்கட்குச் சமய அறிவோ, சமுதாய அறிவோ, பொருளாதார அறிவோ சிறிதும் பிறந்ததாகக் காணப்படவில்லை. ஆகவே, இப் புராண இதிகாசப் படிப்பும் அறிவும் இக் காலத்துக்குப் பொருத்தமில்லையென்பது துணியப்படும். படவே, இப் புராண இதிகாசங்களைத் தொகுத்து நூல் நிலையங்களில் வைப்பது தக்கது. எதிர்காலத்தில் வருபவர்," இவற்றின் வளர்ச்சியால் நாட்டில் மக்கள் சமய அறிவின்றி பிறர்க்கே யுழைத்து ஏழையானார்கள்" என்பதை அறிந்து தங்கள் வாழ்க்கைக்கு வேண்டிய வகையில் வேறு வேறு வகையில் இலக்கியங்கள் செய்து கொள்வார்கள்.

"இதிகாசப் புராணங்களைப் பழிக்கிறார்கள் எனத் தூற்றுவோருள் ஒரு துறையில் கண் மூடிக் கபோதிகளாய்க் கயமை நெறியில் செல்கின்றனர்!!

நீல நிலவு

தில்லை வில்லாளன்

"நீலா! உன் கையில்தான் சேர நாட்டின் சிறப்பும், சீரும் அடங்கிக் கிடக்கின்றன. சேரன் ஒரு குடிமகளின் குறையை நீக்க முடியாது தவிக்கிறான். ஆடினாள் அவள் ஆசையோடு கேட்டேன், 'மகளே' உன் மனதுக்குகந்த பொருள்களைக் கேள், தருகிறேன் என்று. அவள் கேட்ட பொருள்களை என்னால் கொடுக்க முடியவில்லை. ஆம், அவள் கேட்பவை, சேரன் சேகரித்துத்தர முடியாத செல்வங்கள்"

"மன்னரே, இது என்ன விளையாட்டு? சேரக் காவலன், ஒரு பெண் கேட்ட பொருள்களைக் கொடுக்க முடியவில்லையா? என் காதுகளை என்னால் நம்பமுடியவில்லை!"

"சேநாட்டு சூரா! ஆம் அப்படித்தான் நிலைமை இருக்கிறது— அவள் கேட்க வேண்டியதைக் கேட்டாள் — ஆனால் என்னால் கொடுக்க முடியவில்லை"

"அந்தப் பெண் சிரித்து விளையாடும் சிங்காரியோ........ஆட திங்களைக் கேட்டாளோ? ஞாயிறு வேண்டுமென்றாளோ? விண்மீன்களைப்பிடித்துத் தொடுத்த தொலையல் வேண்டுமென்றாளோ?"

"எட்டாப் பொருளல்லவே அவள் கேட்டவை, கிட்டும், எட்டித்தொடும் தூரந்தான்"

"எதுவாயினும் சொல்லுங்கள். என் உயிரை பணயம் வைத்துப் போராடி அப்பொருள்களை உங்கள் காலடியில் காணிக்கையாக்குகிறேன். அவள் கேட்டது முத்துக் குவியலோ.........."

பாண்டியனுக்கு ஒரு நீண்ட ஓலை போதுமே. கவலைக்குக் காரணமில்லையே"

"தங்கப் பாளங்களாய் இருக்குமோ.......'

'பொன்விளைக்கும் தங்கவயல்கள் இல்லையா நம்மிடம்'

"பின் கேட்ட பொருள்கள்?"

"கேட்டாள் மூன்று வரங்கள் அவை வேண்டுமாம்"

"தருவது தானே!"

"கொடுக்க முடியவில்லையே- கேட்டவுடன்"

"அப்படிப்பட்ட பெண்தான் யார், வரங்கள்தான் யாவை"

சேரன் தன் அரசமாளிகையிலே அந்தரங்க அறையில் இங்குமங்கும் உலாவிக் கொண்டே பேசினான். நீலன் பணிவோடு நின்று கொண்டிருந்தான், மன்னன் முகத்தில் கவலை படிந்திருந்தது. நீலன் முகத்தில் ஆச்சர்யம் பரவியிருந்தது.

நீலா. உன்னிடம் உண்மையை சொல்கிறேன். கேட்டவள்பெயர் நிலவு ...."

"தங்கள் அருமை மகள், என்ன ஆச்சர்யப்!"

"அவள் நான் யார் என்று சொல்லுங்க்ள் என்றாள்"

"தயக்கமேன்? சுருக்கமாக நீ என் மகள் என்று கூறுவது தானே"

"அவள் என் மகளல்லவே!"

"என்ன? ...."

"நீலா, உன் கண்களில் வியப்புத் தாண்டவமாடுகிறது, இதைக் கேட்டும் எந்தக் குடிமகனும் ஒப்பமாட்டான், எனக்கு என் மனைவிக்கும் தவிர வேறு யாருக்கும் தெரியாது. அவள் என் மகளல்ல, வளர்ப்புப் பெண்!"

"மன்னரே, உண்மையில் இது ஒரு புதை பொருள்தான்...... தோண்டி யெடுக்க வேண்டியதுதான்'

"சரி கேள் கவனமாய், நான் ஓர் சமயம் வேட்டைக்கு சென்றிருந்தேன். களைத்து வீரர் உறங்கும் நேரம். எழுந்தேன், உலவினேன். ஒரு அழுகைக் குரல் என் செவியில் துயரத்தைப் பெய்தது. குரல் கேட்ட திக்கு நோக்கியே நடந்தேன். நெடுநேரம் அந்த ஒப்பாரி ஓயவில்லை கடைசியில் கண்டேன் ஒருகுடிசையை அதிலேதான் அந்த அழுங்குரல் கிளம்பியது உள்ளே நுழைந்தேன் ஒரு சின்னஞ்சிறு குழந்தையை கிடத்தி விட்டு அழுது கொண்டிருந்தாள் ஓர் ஆரணங்கு—ஆம் அவள் அழகு என் கண்களிலே ஒரு களிப்பைத் தடவியது. உள்ளத்திலே ஒரு கிளர்ச்சியைத் தூவியது, எண்ணத்திலே இரக்கத்தை அள்ளித் தெளித்தது.

'பெண்ணே! உன் உள்ளப் புண்ணுக்கு காரணம்....?" என்றேன்.

"நீ யார் என்றாள் அழுகையை நிறுத்தி விட்டு.

"நான் சேரநாட்டு படைவீரன் என்றேன். பிறகு அவள் தன் துயரச்சரித்திரத்தை என் மனத்தில் கண்ணீரால் எழுதினாள், கலங்காத என் உள்ளம் கலங்கியது".

இளைஞனே! இதுவரைநீ கேளாத கதை எழுதப்படாத காவியம். புலவர்கள் கண்களிலே படாத தலைவியின் காப்பியம். சித்திரக்காரன் சிந்தனையில் எழாத கற்பனை அவள் வாழ்வு, வாழ்விலே வரும் வரண்ட பகுதிகள்! அவள் சொன்னாள் தன் கதையை. நெடுநேரம் அசைவற்று அமர்ந்திருந்தேன், ஆம், அதைக் சொல்கிறேன் கேள்.

"நான் ஓர் ஏழைக்குடியிலே பிறந்த பெண். என்குலம் பாணர் குலம். என் ஊர் கோழியூர். என்

தந்தை பெயர் குயிலன். தாயின் பெயர் மயில். என் பெயர் மல்லிகை.

இளம் வயதிலே ஆடிப்பாடி விளையாடினேன். வானம்பாடியின் வாழ்க்கைதான்—கவலையில்லாமல் பறவைகள் பறந்து கொண்டேயிருக்கின்றன நானும் அப்படி ஒரு 'மனிதப் பறவை' என்றுதான் எண்ணியிருந்தேன், என் பெற்றோரும் என்னை அப்படித் தான் வளர்த்தார்கள்.

மல்லிகை மொக்காக இருந்த காலம் மாளத் தொடங்கியது. மலர்ந்துவிட்டது! மல்லிகா விடம் உன்ளமனம் நாட்டியக்கலை. மகாநந்தமோ...... ? நாட்டியத்தில் உயர்ந்து கொண்டே போனேன், எங்கள் குடும்பம் வறுமையிலே தாழ்ந்து கொண்டே வந்தது. ஆனாலும் என்பெற்றோர் எனக்கு கவலை யேதும் ஏற்படாமல் காத்துவந்தார்கள் கவலை தலையோங்கினால், கலை தலைதாழ்த்தும், மண்டியிடும், பிறகு மறைந்து விடும் என்பது அவர்களுக்குத் தெரியும்! கலை கலையாமல் காக்க எவ்வளவோ பாடுபட்டார்கள். என் தந்தை முன்னெல்லாம் அரச அவையில் தமது இனிய இசையைக்கூட்டி, பரிசில் பெறுவார். ஆனால், வயது வளர, வளர அவரது உடல் தளர்ந்தது. குரலில் நடுக்கம் பிறந்தது, பாணர் பாடுவது எப்படி, பரிசில் பெறுவதும் முடியுமோ?

தாயோ, மலர்த்தோட்டத்திலே வேலைக்கமர்ந்தாள், வகை வகையாக மாலைதொடுத்துத் தருவாள். அது மலர்த்தோட்டக்காரருக்கு அதிக இலாபந்தரும். ஏனெனில், தொடுப்பதிலே அவள் புகுத்தியநவீனம், வாங்குவோர்கள் மனதைக் கவரவல்லதாய் இருந்தது. பெண்டிர் பெரிதும் விரும்பிப் பெறுவர். எங்கள் குடும்பத்திற்கு அதிலே வரும் கூலிதான் அப்பொழுதுள்ள வருமானம்.

இந்த நிலையிலே, என் பருவம் மணம் வீசத் தொடங்கியது. கலையும், பூரணப் பொலிவுடன் என்னைத் தழுவியது, கலையிலே, நான் கலா வல்லி. எங்கள் நிலை கெட்ட குடும்பத்தின் தொல்லையின் எல்லையைச் சொல்ல முடியாதஅளவு வளர்ந்து கொண்டே வந்தது.

சங்கீதன் எங்கள் குடும்ப நண்பன், என் தந்தையோடு அடிக்கடி வந்து உரையாடுவான். வெகு நேரம் எதை எதையோ பேசுவான், கலை என்பான், 'அதன் நிலை அட்டா, கெட்டுக் கிடக்கிறது' என்பான் ஒரு நாள். பிறிதொரு நாள் 'சங்கீதம் ஒன்று தான் சாட்சாத் கடவுளின் அம்சம்' என்று புகழ்வான். 'இசைக்கு ஈடு உலகில் எதைச் சொல்வேன். அதன் சுவைக்கு எதை ஒப்பிடுவேன். தேன் என்றால் திகட்டும் குறை யுண்டு, பழச்சாறென்றால் புளிப்பின்கலப்பிருக்கும், கரும்பென்றால் கடிக்க வேண்டிய கவலையுண்டு, இளநீர் என்றால் அளவுகுறைபகுறையத் தான் சுவைமிகும் தன்மையுண்டு. இசை இன்பத்திற்கு வேறொரு பெயர்!' என்று புகழ்வான். என் தந்தைக்கு கலை யென்றால் உயிர். அதுவும் இசையே அவர் வடிவம். அதை புகழ்வர்களை நடமாடும் கடவுள்கள் என்று தான் எண்ணுவார் ஆகவே சங்கீதனை அவர் அளவு கடந்து நேசித்தார். கலை நுணுக்கங்கள் அத்தனையும் அறிந்தவிலையில்லா மாணிக்கம் என்று போற்றினர்.

தந்தையிடம் அவ்வளவு நல்ல மதிப்பு பெற்ற பிறகு என்னிடம் பழக அவனுக்கு தடங்கல் ஏது? அடிக்கடி வருவான். ஆட்டக் கல்வியிலே கைவந்த வன்போல் 'அந்த பிடி சரியில்லை, இப்படி அடி போடுவது அவ்வளவு நன்றாக இருப்பதில்லை, கைகளில் நெளிவில் தான் நடனக்கலை ஒளிந்திருக்கிறது, கண்களின் வீச்சிலே, அது அடிக்கடி பாய்ச்சும் ஓட்டத்திலே, உதட்டோரத்திலே மேயவிடும் குறும்புச்சிரிப்பிலே, கண்ணங்களிலே கணத்திற்கு கணம் தோன்றி மறையும், வர்ண ஜாலங்களில் வர்ண விரிப்பிலே, வில் வளைவை வேடிக்கைப்பேசும் புருவங்களின் அடிக்கடி அசைந்து பேசாது பேசும் பேச்சிலே, நெற்றிச் சுருக்கத்திலே தான் 'அபிநய சாஸ்திரத்தின்' ஆவி புதைந்திருக்கிறது. மல்லிகா! அவை அத்தனையும் உன்னிடம் பார்க்கிறேன், நீ ஆடவில்லை, இரு நாட்டியக்கலையை நீ ஆட்டி வைக்கிறாய்' என்பான்,

'போதுமே, வீண் புகழ்ச்சி, நிறுத்து உன் வருணனையை' என்று நான் கூறுவது வழக்கம். ஏனெனில் அவன் என்னோடு பேசவதென்றால் என்னைப் புகழ்வது என்று தவறாக நினைத்திருந்தவன் போலவே நடந்து கொண்டான்.

ஒரு நாள் அவன் வந்தான். நான் அழுது கொண்டிருந்தேன்

'மல்லிகா! ஏன் அழுகிறாய்! உன் கண்களிலாநீர், ஐயோ என்னால்சகிக்க முடியவில்லையே; உன் விழிகளில் நீரென்றால் என் இதயத்தில் இரத்தம் ஒன்று அர்த்தம். சொல, உன் குறையை நொடியில் முடிக்கிறேன்!

''நண்பா என்குறையை என்னவென்று சொல்வது! தந்தையோ படுத்தபடுக்கை யாகி விட்டார். தாயோ கண்ணிழந்தாள். நானோ பெண், வாழ்வு எப்படிப்போவது என்று எண்ணினேன், அழுகை வந்து விட்டது''

(தொடரும்)

Edited & Published by N. V. Natarajan at Dravidan Office 6, Sunkurama Chetty St., Madras & Printed by T. M. Parthasarathy at Mercantile Press, 2-45, Muthumari Chetty St, Mannady, Madras.